**OS.NO:48/2021**

**PW 1 : திருமதி. வச்சலா**

நாள் : 06.12.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1 முதல் 6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

சொத்து ஏதாவது கொடுப்பார் என்று நான் இந்த வழக்கை போட்டுள்ளேன். 2ம் வாதி என் மகன் ஆவார். 2ம் வாதியை தவிர எனக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை. 2ம் வாதி என் மகன் என்று காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். இந்த கரீம் முதினீக்கு நான் முதல் மனைவி. 1ம் பிரதிவாதி அவரது இரண்டாவது மனைவி ஆவார். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகள் மற்றும் மகன் ஆவார்கள். 4 பிரதிவாதி கரீம் முதினீன் தயார் ஆவார். 5, 6 பிரதிவாதிகள் கரீம் முதினீன் சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் என்றால், அவர்கள் சொத்தை கிரையம் வாங்கவில்லை. நான்தான் கரீம் முதினீன் முதல் மனைவி என காண்பிக்க நான் நீதிமன்றத்தில் ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 54 வயதாகிறது. கடந்த 54 ஆண்டுகளாக என் பெயர் வச்சலாதான். நான் இன்று வரை இந்து மதத்தில் இருக்கிறேன் என்றால், சரியல்ல. நான் மசூதிக்கு செல்கிறேனா என்றால், மசூதிக்கு ஆண்கள் மட்டும்தான் செல்வார்கள். பெண்கள் செல்லமாட்டார்கள். நான் வீட்டில் தினமும் 3 முறை தொழுகை செய்கிறேன். தொழுகை செய்யும் முறைகள் தெரியும். என் கணவர் எனக்கு தொழுகை எப்படி செய்வது என கற்றுக்கொடுத்தார். குரானின் வசனங்கள் எனக்கு தெரியாது. அல்லா என சொல்லி தொழுகை செய்வேன். என் கணவர் என்னை நவல்பூர் மசூதிக்கு அழைத்துச்சென்று, இஸ்லாமிய மதத்திற்கு மாற்றினார். நான் இஸ்லாம்

மதம் மாறியதற்கு ஆவணம் ஏதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் மதம் மாறும் போது அதற்கு சாட்சியாக என் கணவரின் தந்தை இருந்தார். நான் இஸ்லாமிய மதத்திற்கு மாறிய பிறகு என் பெயரை பாத்திமா என்று அழைப்பார்கள். என் பெயர்மாற்றம் குறித்து அரசு Gazetee ல் Publish செய்யவில்லை. இந்த வழக்கில் என் பெயர் வச்சலா என்கிற பாத்திமா என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. நான் இன்றுவரை இந்து மதத்தில் இருக்கிறேன் என்றாலும், இந்து கடவுளை வழிபடுகிறேன் என்றாலும், அது சரியல்ல. எனக்கும், கரீமுதினீக்கும் 13.05.1981 ல் வீட்டில் இஸ்லாம் முறைப்படி திருமணம் நடந்தது. திருமணத்தின் போது என் தரப்பில் சாட்சியாக பிரபாகரன் என்பவரும், என் கணவர் தரப்பில் சாட்சியாக என் மாமனார் இருந்தார். எங்கள் இருவருக்கும் திருமணம் நடந்ததை உறுதிபடுத்தும் வகையில் ஆவணம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால், சரிதான். திருமணத்தின் போது Mahar ஆக எனக்கு தொகை எதுவும் அளிக்கப்படவில்லை. நான் சொல்வது போல் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. கரீமுதின் என்னை 1984 ம் ஆண்டு விட்டு விட்டுச்சென்றார். என் கணவர் என்னை விட்டுச்சென்றது சம்மந்தமாக ஜமாத்திற்கு புகார்கொடுக்க சென்றேன். ஆனால், ஜமாத்தார் என்னை அங்கு வரவேண்டாம், போங்கள் என்று சொல்லிவிட்டார்கள். என் கணவர் என்னை விட்டுச்சென்றது சம்மந்தமாக இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலீசார் என் கணவரை அழைத்து பேசினார்கள். ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை. என் கணவர் 1984 ல் விட்டுச்சென்ற பிறகு, 2009 ம் ஆண்டு வாலாஜா நடுவர்

நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு மனு போட்டேன். நான் கரிம் முதீனுடன் சேர்ந்து வாழ பரிகாரம்கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு விவரங்களை இந்த வழக்கில் சொல்லவில்லை. நான், கரிமுதினுடன் சேர்ந்து வாழ பரிகாரம் கோரி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. கரிம் முதீன் பிரியாணி ஒட்டல் நடத்தினார் என்று காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வாலாஜா நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கொடுக்க உத்தரவானது ஒரு தலைபட்சமாக கரிம்முதீன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத நிலையில் ஒரு தலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால், சரிதான். கரிம்முதீன் இறந்தது எனக்கு தெரியாது. கரிம்முதீனுக்கு கடையில் இருந்த போது நெஞ்சுவலி ஏற்பட்டு சிஎம்சி மருத்துவமனையில் சேர்த்த அன்றே இருந்துவிட்டார். கரிம்முதீன் நோய்வாய் பட்டு சிஎம்சி மருத்துவமனையில் 45 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று, அதன் பிறகுதான் இறந்தார் என்றால், சரியல்ல. கரிம்முதீனுக்கு நெஞ்சு வலி ஏற்பட்ட போது நான் சென்னையில் இருந்தேன். 2ம் பிரதிவாதி பிறந்து ஒரு வருடம்கழித்த பிறகு நான் சென்னைக்கு சென்று, செட்டில் ஆகிவிட்டேன். சென்னையில் நான் வீட்டு வேலை செய்தேன். இந்த வழக்கு போடுவதற்காகதான் நான் ராணிப்பேட்டைக்கு வந்தேன். தற்போதும் நான் சென்னையில்தான் குடியிருக்கிறேன். நான், கரிம்முதீனுடன் ராணிப்பேட்டையில் என் வீட்டில் வசித்தேன். கரிம்முதீன் என்னுடன் வசித்ததற்கு ஆதாரமாக குடும்ப அட்டை உள்ளது. அவ்வாறு எந்த குடும்ப அட்டையும் ஆதாரமாக இல்லை என்றால், சரியல்ல. கரிம்முதீனுக்கு வாதிகள் ஆகிய நாங்களும் ஒரு வாரிசு என வருவாய் கோட்டாட்சியரிடம்

எந்த ஆண்டு மனு கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. அந்த மனுவை நான் 10.01.2019 ல் கொடுத்தேன் என்றால், எனக்கு படிக்க தெரியாது. என் மகனை கேட்டால்தான் தெரியும். கரிம்முதீன் இறந்து சுமார் 4 ஆண்டுகள் கழித்துதான் அந்த மனுவை கொடுத்தேன் என்றால், இல்லை. அதற்கு முன்னதாகவே கொடுத்தேன். அந்த மனுவின் பேரில் என்னை வருவாய்கோட்டாட்சியர் விசாரித்தார். வருவாய்கோட்டாட்சியரிடம் எனக்கும், கரிம்முதீனுக்கும் திருமணம் நடந்ததற்கு ஆதாரம் கொடுக்கவில்லை என்றால், அப்போதெல்லாம் ஆதாரம் இல்லை. கரிம்முதீனுக்கு உள்ள சொத்துக்களை அவரது மனைவி, பிள்ளைகள், தாயார் விற்று விட்டார்கள் என்று சொன்னால், அவர்கள் விற்கவில்லை. 5, 6 ம் பிரதிவாதிகள் எங்களுக்கு எதுவும்கொடுக்கக்கூடாது என்று 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் வந்து பேசுவதால், 5, 6 ம் பிரதிவாதிகளை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம். வழக்கு சொத்தில் வீடு, கடை உள்ளது. அந்த வீடு, கடையின் அளவு என் மகனுக்குதான் தெரியும். அந்த சொத்தை கரிம்மூதீன் 2006 ம் ஆண்டு காலிமனையாக வாங்கினார் என்றால், எனக்கு தெரியாது. கரிம்மூதீன் அந்த இடத்தை காலி மனையாக வாங்கி, வங்கியில் கடன் பெற்று வீடு, கடை கட்டினார் என்றால், அது தவறு. பிரியாணி கடை வருமானம் மூலம் கட்டினார். கரிம்மூதீனுக்கு வங்கி கடன் இல்லாமல், வெளி நபர் கடன்களும் இருந்தது என்றால், அவர் கடன் பெற்று மனைவி, பிள்ளைகளுக்கு கொடுத்தார். கரிம்மூதீனுக்கு நிறைய கடன்கள் இருந்தது என்றாலும், அவர் இறந்த பிறகு 1 முதல் 4 பிரதிவாதிகள் கடன்களை அடைத்தார்கள் என்றால், அதற்கு நாங்கள் எதுவும் செய்ய முடியாது.

வீட்டை விற்று வந்த பணத்தில் கரிம்மூதீனின் பாதி கடன் தான் அடைக்க முடிந்தது என்றாலும், மீதி கடன் உள்ளது என்றால் அதற்கு நான் என்ன செய்ய முடியும். கரிம்மூதீனின் கடன்களில் நான் பங்கேற்க தயாராக இல்லை. எனக்கும், கரிம்மூதீனுக்கும் திருமணம் ஆகவில்லை என்றால், சரியல்ல. கரிம்மூதீனுக்கு நான் சட்டப்படியான மனைவி அல்ல என்பதால், கரிம்மூதீனின் சொத்தில் பாகம் கேட்க முடியாது என்றால், சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

S/d. M.Selvam,
I Additional District Judge,
Ranipet